தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 139/மா/2021**
**நாள் : 7/03/2022**

திருமதி. A. பாலம்மாள்,
திண்டுக்கல். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

திண்டுக்கல் மாநகராட்சி, முனிசிபல் காலனி, நெட்டுத் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. A. பாலம்மாள் என்பவரது 11.12.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.12.2021-ல் பெறப்பட்டு 139/மா/2021 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திண்டுக்கல் மாநகராட்சி, முனிசிபல் காலனி, நெட்டுத் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. A. பாலம்மாள் தனது முறையீட்டு மனுவில், நான் திண்டுக்கல் மாநகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றேன். எனக்கு 2000 முதல் 2015 வரையான காலத்துக்கு P.F. தொகை வட்டி வழங்கவில்லை. என் கணவர் அழகர்/கருப்பன் ஓய்வு பெற்ற நிலையில் 21.4.2009 அன்று காலமானார். அவர் இறப்புக்கு பின் குடும்ப ஓய்வூதியம் பெறுகிறேன். அவர் இறந்த 21.4.2009 முதல் திருத்திய ஓய்வூதியம் வழங்க வேண்டும். திண்டுக்கல் மாநகராட்சி இப்போது வழங்க உத்தரவிட வேண்டும்.

1. P.F. தொகை வட்டி.
2. மருத்துவ காப்பீடு அட்டை.
3. 70 வயது ஆனவர்களுக்கு 10 சதவீதம் பென்ஷன் உயர்வு தர வேண்டும்.
4. உள்ளாட்சி நிதி தணிக்கை பணிகள் செய்ய திண்டுக்கல் மாநகராட்சி தனி மேசை அமைத்து துரிதமாக பணப் பயன்களை தர வேண்டும்.

5. திருத்திய ஓய்வூதியம் வழங்க சென்னை உள்ளாட்சி நிதி தணிக்கை ஓய்வூதியர் பணிப் பதிவேடு திண்டுக்கல் மாநகராட்சியில் இருப்பதால் ஆணையர் வாயிலாக வரப்பெற்றால் தான் உள்ளாட்சி நிதி தணிக்கை திருத்திய ஓய்வூதியம் வழங்க இயலும் என்கிறது. இதனால் ஓய்வூதியர்கள் பணப்பயன்கள் பெறாமல் காலமானார்கள். வாழ்நாளில் திருத்திய ஓய்வூதியம் வழங்க செய்ய பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

2) மனுதாரரது புகார் மனுவின் மீது திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை கோரப்பட்டது. திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் தனது 11.01.2022 நாளிட்ட தனது அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

"2000ம் ஆண்டு வரை திண்டுக்கல் மாநகராட்சி பணியாளர்களுக்கு இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை அவர்களிடமிருந்து சேமநல நிதிக்கான வட்டித் தொகை பெறப்பட்டு அனைத்து பணியாளர்களுக்கும் வழக்கப்பட்டுவிட்டது. அதன் பின்னர் 2001ம் ஆண்டு முதல் 2015ம் வரைக்கான சேமநல நிதிக்கான வட்டித் தொகை வழங்கக்கோரி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை அவர்களுக்கு உரிய பிரேரணைகள் சமர்ப்பித்ததில் 5வது ஊதியக் குழுவிற்கான நிலுவைத் தொகைகள் பெறப்பட்டுவிட்டது என்பதற்கான சான்றுடன் மீள சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவிப்பதுடன், உரிய முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு சேமநல நிதி தொகைக்கான வட்டித் தொகை பெறப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு வட்டித் தொகை உடன் பிரித்து வழங்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

3) மேலும், திருமதி. பாலம்மாள் என்பவரது கணவர் (லேட்) அழகர்/கருப்பன் என்பவர் ஓய்வு பெற்ற நிலையில் 21.04.2009 அன்று காலமானார் என்றும் அன்னாருக்கு சேல நல நிதிக்கான வட்டித் தொகை வழங்கப்படவில்லை எனவும், ஏழாவது ஊதியக் குழுவிற்கான நிலுவைத் தொகையும் வழங்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், (லேட்) அழகர் / கருப்பன் மற்றும் திருமதி. பாலம்மாள் ஆகியோர் ஏழாவது ஊதியக்குழு அறிவிக்கப்படும் தேதியான 01.01.2016க்கு முன்னரே ஓய்வுபெற்றுவிட்டனர். எனவே, இவ்விருவருக்கும் ஏழாவது ஊதியக் குழுவிற்கான நிலுவைத் தொகை குறித்த கேள்வி எழவில்லை என்பதுடன், எந்தவொரு பணியாளருக்குமே ஏழாவது ஊதியக் குழுவிற்கான நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை" என தெரிவித்துள்ளார்.

4) முறையீட்டு மனுதாரர் திருமதி. பாலம்மாள் மற்றும் எதிர் மனுதாரர் ஆகியோரை 24.2.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 14.2.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

திருமதி. பாலம்மாள் 24.2.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"எனது கணவர் திரு. அழகர் என்பவர் திண்டுக்கல் மாநகராட்சியில் பணியாற்றி 2007ல் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்றார். பணி ஓய்வுக்குப் பின்னர், 2009ஆம் ஆண்டில் காலமானார். எனது கணவர் பணியில் இருந்தபோது பிடிக்கப்பட்ட பி.எப். பணத்திற்கான வட்டித்தொகை 70 வயது ஆனவர்களுக்கு 10 சதவீத பென்சன் உயர்வுடன் திருத்திய பென்சன் தொகை எனக்கு வழங்கப்படவில்லை. இது தொடர்பாக திண்டுக்கல் மாநகராட்சிக்கும், உள்ளாட்சி நிதி தணிக்கை அலுவலகத்திற்கு பலமுறை பல மனுக்கள்

என்னால் சமர்பிக்கப்பட்டது. உள்ளாட்சித் தணிக்கைத் துறையை நேரில் அனுகியபோது எனது கணவரின் பணிப் பதிவேட்டினை மாநகராட்சியிலிருந்து உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்பினால்தான் மேல் நடவடிக்கை எடுக்கமுடியும் என தெரிவித்துவிட்டனர். மேலும் பென்சன் புத்தகமும் எனக்கு மாநகராட்சியால் வழங்கப்படவில்லை. எனவே, எனது கணவரின் மறைவுக்குப் பின் எனக்கு சேரவேண்டிய திருத்திய ஓய்வூதியம், பி.எப். வட்டித் தொகை மற்றும் பென்சன் புத்தகம் ஆகியவற்றை விரைவில் பெற்றிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.'' என்று தெரிவித்துள்ளார்.

5) திண்டுக்கல் மாநகராட்சியில் கண்காணிப்பாளராக பணிபுரியும் திரு. S. வில்லியம் சகாயராஜ் 24.2.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“மனுதாரர் திருமதி. பாலம்மாள் என்பவரின் கணவர் திரு. அழகர் என்பவர் திண்டுக்கல் மாநகராட்சியில் பணியாற்றி 2007ல் பணி ஓய்வு பெற்றுள்ளார். அவருக்கு சேர வேண்டிய சேமநல நிதி வட்டித் தொகை வழங்குவது தொடர்பாக உள்ளாட்சி நிதித் தணிக்கை அலுவலகத்தில் நிலுவையில் உள்ளது. மனுதாரரின் கணவர் திரு. அழகர் அவர்கள் பணிப் பதிவேட்டினை மேற்கண்ட நிதித் தணிக்கைத் துறைக்கு இன்னும் இரண்டு நாட்களில் மாநகராட்சியால் அனுப்பப்படும் எனவும், அவருக்கு சேரவேண்டிய பி.எப். நிலுவை தொகை தொடர்பாக உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையை நேரில் அணுகி மனுதாரருக்கு நிலுவைத் தொகை வழங்கப்படும் எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மனுதாரருக்கு அவரது கணவரின் ஓய்வூதியப் புத்தகம் மாநகராட்சியால் ஓரிரு நாட்களில் வழங்கப்படும் எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

6) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் ஆணையர் திண்டுக்கல் மாநகராட்சி அவர்களின் விளக்க அறிக்கை மற்றும் திண்டுக்கல் மாநகராட்சியில் கண்காணிப்பாளராக பணிபுரியும் திரு. S. வில்லியம் சகாயராஜ் என்பவர் அளித்துள்ள வாக்குமூலம் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்டவை கண்டறியப்பட்டன:-

- மனுதாரர் திண்டுக்கல் மாநகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 2015ல் ஓய்வு பெற்றுள்ளார். மனுதாரரின் கணவர் திரு. அழகர் 2007ல் ஓய்வு பெற்றுள்ளார்.
- மனுதாரருக்கு அளிக்கப்பட வேண்டிய சேமநல நிதிக்கான வட்டித் தொகை வழங்கப்படாததையடுத்து மேற்படி தொகையை விரைந்து வழங்கிட உரிய ஆணையினை பிறப்பிக்கக்கோரி 11.12.2021ல் இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனுவினை அளித்துள்ளார்.
- திண்டுக்கல் மாநகராட்சி சார்பாக அளிக்கப்பட்டுள்ள விளக்க அறிக்கையில் 2000ஆம் ஆண்டு வரை திண்டுக்கல் மாநகராட்சி பணியாளர்களுக்கு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையிடமிருந்து சேமநல நிதிக்கான வட்டித் தொகை பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 2001 முதல் 2015ஆம் ஆண்டு வரைக்கான சேமநல நிதிக்கான வட்டித்தொகை வழங்கக்கோரி பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டதில் 5-வது ஊதியக் குழுவிற்கான நிலுவைத் தொகை பெறப்பட்டுள்ளது என்பதற்கான சான்றுடன் பிரேரணையினை

மீள சமர்ப்பிக்குமாறு உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையினால் கேட்டுக்கொள்ளப் பட்டதன் அடிப்படையில், பிரேரணைகள் அனுப்பப்பட்டு நிலுவையில் உள்ளதென்றும், இதுகுறித்து உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை அலுவலகத்தினை நேரடியாக தொடர்புகொண்டு மனுதாரருக்கு சேரவேண்டிய பி.எப். தொகைக்கான வட்டியை விரைவில் பெற்று திண்டுக்கல் மாநகராட்சியால் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், மனுதாரரின் கோரிக்கை குறித்து திண்டுக்கல் மாநகராட்சியால் அளிக்கப்பட்டுள்ள விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் ஏற்புடையதாக இல்லை. மாநகராட்சியின் கடைநிலை ஊழியராக பணிபுரிந்த திருமதி. A. பாலம்மாள், 2015–ஆம் ஆண்டிலும் மற்றும் அவரது கணவர் திரு. அழகர் என்பவர் 2007ஆம் ஆண்டிலும் ஓய்வு பெற்றுள்ளனர். ஓய்வு பெற்றவர்களுக்கு கடந்த பல ஆண்டுகளுக்கு மேலாக வட்டி வழங்கப்படாதது மிகவும் பரிதாபத்திற்குரியது. இதனை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாக கண்டிக்கிறது. 2001-ஆம் ஆண்டு முதல் 2015–ஆம் ஆண்டு வரைக்கான சேமநல நிதிக்கான வட்டித்தொகை பணியாளர்களுக்கு இன்னமும் வழங்கப்படாத நிலையில், பாதிக்கப்பட்ட/ஓய்வு பெற்ற பணியாளர்களின் நிலைமையைக் கருதி, மேற்படி காலத்திற்கு பணியாளர்களின் சேமநல நிதிக்கான வட்டித் தொகையை விரைவாக ஒப்புதல் அளித்து வழங்கிடுமாறு உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்குநரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது. மேலும், சேமநல நிதிக்கு வழங்கப்படவேண்டிய வட்டித் தொகையினை உரிய முறையில் கணக்கிட்டு, காலதாமதமின்றி வழங்கப்படவேண்டிய வட்டித் தொகைக்கு ஒப்புதல் அளித்திடுமாறும் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறைக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும், பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஊழியர்களின் நலனைக் கருதி, இதுபோன்ற காலதாமங்களை தவிர்த்திட நகராட்சி நிர்வாக துறையிலிருந்து மாநகராட்சி பணியில் இணைந்தோர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை விரைந்து களைந்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், நகராட்சி மற்றும் மாநகராட்சி பணியாளர்களின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் தொகை அந்தந்த கணக்கு தலைப்பில் உரிய காலத்திற்குள் செலுத்தப்படுவதில்லை என விசாரணையில் தெரியவருகிறது. மேலும் இவ்விசாரணையில், சேமநல நிதிக்காக பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை, அந்தந்த மாதங்களில் உரிய கணக்கு தலைப்பில் செலுத்தப்படாமல் வருட கணக்கில், காலதாமதமாக செலுத்தப்படுவதால், பணியாளர்களுக்கு கிடைக்கவேண்டிய வட்டித் தொகை உள்ளிட்ட பணப் பலன்கள் அவர்களுக்கு கிடைக்கப்பெறாமலே போகிறது என்பதையும் இவ்விசாரணையில் அறியமுடிகிறது. எனவே, நகராட்சி நிர்வாக இயக்குநர் இதில் சிறப்பு கவனம் செலுத்தி அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்த தொகைகளை (PF உள்ளிட்ட தொகைகள்), அந்தந்த மாதங்களிலேயே உரிய கணக்கு தலைப்பின்கீழ் செலுத்த அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆணையாளர்களுக்கு அறிவுறுத்திடுமாறு இம்முறைமன்ற நடுவம் கேட்டுக்கொள்கிறது. மேலும் திண்டுக்கல் மாநகராட்சியால் சேமநல நிதி தொகையை உரிய காலத்தில் பிடித்தம் செய்து, உரிய கணக்கு தலைப்பின்கீழ் செலுத்தாமல் வட்டித்தொகை இழப்புகள் பணியாளர்களுக்கு ஏற்பட காரணமான அனைத்து அலுவலர்கள் மீதும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை

செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் மனுதாரர்கள் ஓய்வு பெற்று பல ஆண்டுகளுக்கு மேலான நிலையில், அவர்களது குடும்ப நிலையைக் கருதி, மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய சேமநல நிதிக்கான வட்டித்தொகையினை இரண்டுமாத காலத்திற்குள் வழங்கிடுமாறு திண்டுக்கல் மாநகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2022-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திருமதி. A. பாலம்மாள்,
க/பெ. அழகர்,
முனிசிபல் காலனி,
எண்.1-A, நெட்டுத் தெரு,
திண்டுக்கல் மாவட்டம் - 624 001.
2. ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல் - 624001.
3. இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
ஒருங்கிணைந்த நிதித்துறை வளாக கட்டிடம், 4வது தளம்,
நந்தனம், சென்னை – 600 035.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.
5. இணை இயக்குநர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

07/03/22

செயலாளர்.